## 2.11 நியமன சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைக்கும் பணிகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.43 நாள் : 21.05.2003

படிக்க :

1. அரசு ஆணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி துறை, நாள்.19.06.2002
2. அரசு ஆணை(நிலை) எண்.92, ஊரக வளர்ச்சி துறை, நாள்.07.08.2002
3. சென்னை மாநகராட்சி ஆணையர் க.எண்.பிடிசி பி6/113/2002/நாள்.3.10.2002 மற்றும் 11.11.2002
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் க.எண்.ஆர்.ஓ.சி.96365/2002/தி5, நாள்.23.12.2002
5. அரசாணை (நிலை) எண்.38, ஊரக வளர்ச்சி நாள்.30.04.2003

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நியமன சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைக்கும் பணிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளரால் நிதி விடுவிக்கப்பட்டு சென்னை, மதுரை, கோவை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், நியமன சட்டமன்ற உறுப்பினர் மாநிலத்திலுள்ள பிற மாவட்டங்களில் பணிகள் பரிந்துரை செய்வது குறித்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதால், இது குறித்து தெளிவுரை வழங்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக ஊரக வளர்ச்சி இயக்குநர், தனது கருத்துருவில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் நியமன பாராளுமன்ற உறுப்பினர், அவர் தேர்ந்தெடுக்கும் மாநிலத்தில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாவட்டங்களிலோ பணிகளைப் பரிந்துரைக்கலாம் எனக் குறிக்கப்பட்டுள்ளது என்றும், அதே முறையில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நியமன சட்டமன்ற உறுப்பினரும் மாநிலத்தில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்க வழிவகை செய்யலாம் என்று கூறியுள்ளார்.

2. ஏற்கனவே நியமன சட்டமன்ற உறுப்பினர் மாநிலத்தில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைத்து செயல்படுத்தியுள்ளதாலும், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் நியமன பாராளுமன்ற உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட உரிமையின் அடிப்படையிலும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று நியமன சட்மன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாவட்டங்களிலோ பணிகளைப் பரிந்துரைக்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்